**OS No.181/2015**

**DW–3 –ராஜலட்சுமி**

**த/பெ.**

**நாள். 16.04.2026**

**<u>பிரதிவாதி தரப்பில் சாட்சி–3 மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை. 3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.</u>**

1.என்னுடைய மகன் ராம் ஆனந்த். என் மகன் சென்னையில் வேலை செய்கிறார் பொள்ளாச்சியில் மருத்துவமனையில் இருக்கிறாரா என்றால் இல்லை. நான் மூன்றாவது பிரதிவாதி சித்ராவின் வீட்டில் கூடியிருக்கிறேனா என்று கேட்டால் அவினாசியில் இருக்கிறேன். 2015 ஆம் ஆண்டில் எனக்கு நீதிமன்றத்தில் ஆஜராகும் படி அழைப்பாணை வந்தது. அதன் பின்பு வழக்கு விவரங்களை முழுமையாக தெரிந்து கொண்டேனா என்று கேட்டால் தெரிந்துகொண்டேன்.

2. இடைநிலை மனுவின் மூலமாக நானும் வாணியும் நீதிமன்றத்தில் ஆஜர் ஆனோம். இந்த வழக்கின் நான் எதிர்வாதம் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அதற்கு காரணம் குறிப்பிட்டு எதுவும் இல்லை. என்னுடைய பள்ளி மாற்று சான்றிதழில் என் தகப்பனார் தான் கையெழுத்து செய்து வாங்கி இருக்கிறார் என்றும் சொன்னால் ஆமாம்.

3.பிராதில் என்னுடைய தகப்பனார் நீண்ட காலமாக படுத்த படுக்கையாக உடல்நலம் குன்றி இருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லி இருப்பதை தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. என்னுடைய தாயார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார் பல மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்றார் இருந்தும் குப்புசாமி நாயுடு மருத்துவமனையில் காலமாகிவிட்டார் என்றும் சொன்னால் சரிதான்.

4. உயில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். எப்போது படித்து பார்த்தேன் என்று கேட்டால் என் அப்பா அம்மா எழுதும் போது கூப்பிட்டு விட்டார்கள் எழுதியபோது பார்த்தேன் எழுதிய அன்று பார்த்தேன். சாட்சி மீண்டும் இரண்டு நாட்கள் கழித்து தான் பார்த்தேன் என்று கூறுகிறார். உயிலிருக்கும் வாசகங்கள் தெரியுமா என்றால் தெரியாது. உயிரை எழுதும் போது அருகில் இருந்து பார்த்தேனா என்றால் இல்லை. உயிலிருக்கும் வாசகங்கள் உண்மைதானா என்று தெரிந்து கொண்டேனா என்றால் உண்மைதான்.

5. நான் உயிலை பார்த்ததாக சொல்லி இருப்பது அசலயா அல்லது நகலயா என்று கேட்டால் உயில் அசலை தான் பார்த்தேன். சாட்சி மீண்டும் உயில் என் சான்று நகலை பார்த்தேன் என்று கூறுகிறார். உயிரில் வயோதிகம் காரணமாக உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உயில் எழுதுவதாக குறிப்பிட்டிருந்தபோது அதில் இருக்கும் கூற்று உண்மைதான என்றால் எனக்கு தெரியவில்லை. உயிலில் நான்கு கையெழுத்துக்கள் இருந்தன. உயிலின் இரண்டாவது பக்கத்தில் இருக்கும் கையெழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று மாறுபடுகிறதா என்று கேட்டால் என் அப்பா பொதுவாக மாற்றி மாற்றி தான் போடுவார்.கையெழுத்து மாறுபட்டு தான் இருக்கிறது,.

6. நான் பார்த்த உயிலில் ஒவ்வொரு பக்கத்திலும் கைரேகை இருந்ததா என்று கேட்டால் ஒரே ஒரு கைரேகை தான் இருந்தது. உடல் நலக்குறைவா சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வர முடியாது என்ற காரணத்தினால் பதிவு சார் பதிவாளர் வீட்டிற்கு அழைத்து வந்து செய்யப்பட்டதா என்றால் ஆமாம்.

7. உயில் எப்போது யாரால் எங்கு வைத்து தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என் அப்பா சார்பதிவாளர் அலுவலகம் செல்ல முடியாத நிலையில் இருந்தார் என்று சொன்னால் அவர் உடம்பிற்கு முடியாமல் இருந்தார். என்னுடைய பிரமாணவாக்கு மூலத்தில் மற்றும் எதிர்வழக்குறையில் மூணாவது பிரதிவாதி சித்ரா தான் என்னுடைய தாய் மற்றும் தந்தையரின் மருத்துவ செலவுகளை பார்த்துக் கொண்டார் என்றும் சொன்னால் சரிதான்.

நீண்டகாலமாக என் தாய் தந்தையருக்கு மருத்துவ உதவி தேவைப்பட்டிருந்தது என்று சொன்னால் ஆமாம்.உயில் எழுதப்பட்டதாக சொல்லப்படும் தேதியில் நான் அவினாசியில் இருந்தேன்.

8.**பி.வா.சா.ஆ–4** தான செட்டில்மெண்ட் எழுதிய காலகட்டத்தில் என் தாயார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தார்கள் என்றால் ஆமாம். அந்த சமயத்தில் எந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார் என்று ஞாபகம் இல்லை. உயிலின் அடிப்படையில், என் தாயாருக்கு சொத்து வந்திருந்தது என்பதை காட்ட வரிவிதிப்போ அல்லது பட்டா மாறுதலோ எதுவும் செய்யப்படவில்லை என்று சொன்னால் ஆமாம்.

9. அப்பாவிடம் இருந்து அம்மாவிற்கு சொத்துக்கள் வந்து அடைந்தது என்பதை காட்ட எந்த ஆவணமும் இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது.என் அப்பாவிற்கு நேரடியாக நாலு பெண்கள் வாரிசாக இருந்த போதிலும் அந்த பெண்கள் நாலு பேருக்கும் சொத்துக் கொடுக்காமல் இருந்ததற்கு விளக்கம் ஏதும் இருந்ததா என்றால் இருந்தது. சாட்சி வேண்டும் தானாக முன்வந்த உயிலிலே ஏதும் சொல்லவில்லை என்று கூறுகிறார்.

10. என் அம்மாவிற்கு எதற்காக சொத்து கொடுக்கிறார் என் அப்பா என்று உயிலில் ஏதாவது வாசகம் எழுதி இருக்கிறாரா என்றால் இல்லை. மூன்றாவது பிரதிவாதி சித்ராவும், இரண்டாவது பிரதிவாதியான வாணியும் அண்ணன், தம்பிகளை திருமணம் செய்து கொண்டார்கள். எனக்கு 1991 ஆம் ஆண்டில் திருமணம் நடந்தது சித்ராவிற்கு 1996 ஆம் ஆண்டு திருமணம் நடந்தது.

11.குடும்ப ஏற்பாடு என்று நான் சொல்லி இருந்த போதிலும் அந்த குடும்ப ஏற்பாடு எந்த வருடம் ஏற்பட்டது என்றால் அது 2000 ஆம் ஆண்டு.அந்தக் குடும்ப ஏற்பாடு யார் யார் முன்னிலையில் ஏற்பட்டது என்று என்றும் எந்த தேதியில் ஏற்பட்டது என்றும் என்னுடைய பிரமான பத்திரிக்கையிலும் எதிர் வழக்குரையிலும் சொல்லவில்லை என்றால் என் அம்மா அப்பா இருக்கும்போதே

ஏற்பட்டது தான் அது.தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை.யார் முன்னிலையில் என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை. குடும்ப ஏற்பாடு நடந்த அன்று மூன்றாம் பிரதிவாதிக்கு சொத்து சுவாதீனம் கொடுக்கப்பட்டதா என்று கேட்டால் அன்றே கொடுக்கப்பட்டது. அன்றைய தேதியில் பணம் கொடுக்கல் வாங்கல் பற்றி ஆவணம் ஏதும் எழுதிக் கொள்ளப்படவில்லை என்று சொன்னால் சரிதான் வாய்மொழியாக தான் பேச்சு.

12. குடும்ப ஏற்பாட்டின் அடிப்படையில் குடும்ப ஏற்பாட்டில் குடும்ப ஏற்பாடு ஏற்பட்ட அன்று சித்ராவிற்கு சுவாதீனம் கொடுக்கப்பட்டதா அல்லது என் அம்மாவின் இறப்பிற்கு பின்பு சுவாதீனம் கொடுக்கப்பட்டதா என்று கேட்டால் குடும்ப ஏற்பாடு ஏற்பட்ட அன்று சுவாதீனம் கொடுக்கப்பட்டது. குடும்ப ஏற்பாட்டின் படி பணம் கொடுக்கப்பட்டதாக சொல்லியிருந்த போதிலும் அது வங்கி பரிவர்த்தனையா என்று கேட்டால் இல்லை. நகைகள் கொடுக்கப்பட்டதாகவும் பணம் கொடுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கும் விவரம் சொத்தை அபகரிக்க பொய்யான விவரம் என்று சொன்னால் சரியல்ல.

13. நான் சொல்வது போல் குடும்ப ஏற்பாடு எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. குடும்ப ஏற்பாட்டில் சமயத்தில் மூன்றாவது பிரதிவாதிக்கு சுமார் 22 வயது இருக்கும். உயிலின் அடிப்படையில் என் அம்மா எந்த சொத்தையும் அடையவில்லை என்றும் சொன்னால் சரியல்ல அதன் பின் அவர் தான செட்டில்மெண்ட் எதுவும் எழுதி வைக்கவும் இல்லை என்றால் சரியல்ல. என் அம்மாவின் கையெழுத்து பக்கத்திற்கு பக்கம் மாறுபடுகிறது என்று சொன்னால் சரியல்ல. என் அம்மா எந்த தான செட்டில்மெண்ட் எழுதி வைக்கவும் இல்லை சுவாதீனம் கொடுக்கவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

14. இந்த வழக்கு முடியும் தருவாயில் நானும் சித்ராவும் ஒன்றாக சேர்ந்து கொண்டு வாதியை ஏமாற்ற வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்காடுகிறோம் என்று சொன்னால் சரியல்ல. 2021 ஆம் ஆண்டில் எனக்கு மூன்றாவது பிரதிவாதிக்கும் சரியான பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரிதான்.

வாடகைக்கு இருப்பவர்கள் உடன் வாடகை பத்திரம் ஏதாவது இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது.

15.வாதி மனோஜ் குமார் தான் என்றும் வழக்கு சொத்தின் சுவாதீனத்திலிருந்து வருகிறார் என்றால் சரியல்ல. நானும் சித்ராவும் ஒன்றாக சேர்ந்து கொண்டு வாதிகளை ஏமாற்ற வேண்டும் என்று பொய் வழக்கு அடைகிறோம் என்று சொன்னால் சரியல்ல. உயில் போலியானது என்று எனக்கு நன்கு தெரிந்திருந்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. வாதி கோரி இருக்கும் பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

சாட்சியின் வாக்குமூலமானது என் முன்னிலையில் பதிவு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

Dr.V.Sree Vidya,
Digitally signed by Dr.V.Sree Vidya,
Date: 2026.04.16 16:05:52 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.